Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Issue - 2, May 2023 E-ISSN: 2583-0481

# Music-Related Names in Nikandu

**Dr. K. Sumithra,** Assistant Professor of Tamil,
Sri Moogambigai Arts & Science College (Women), Dharmapuri, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0008-8941-9786**
**DOI: 10.5281/zenodo.7981590**
**Received** 10 March 2023; **Revised form** 09 April 2023; **Accepted** 21 April 2023; **Available online** 26 May 2023.

## Abstract

*Before the Nikands (Grammar treatises or Dictionary) appeared in Tamil, semantic texts were given the common names of adjectives. In Tamil, the rhetoric of 'Nikandu' is first used in the theological discourse. However, it was not until the 16th century that the word 'Nikandu' came into existence in the "Sudamani Nikandu". Nikandu is basically like a grammar treatise. The word 'Nikandu' means 'gathering' or 'volume'. It is the general nature of the Nikandu texts to discriminate between the various names and verb nouns of the adjective and adjectives to define the meanings of the words. Nikandus are therefore an essential tool for language learning and training. Various Nikandus and dictionaries have been created in Classical Tamil. There are twelve volumes in Nikandus, it is essential to compile words in a dictionary from all words. However, only the 'Names of Music', which appear in one of the twelve volumes of phonemes have been examined in this article.*

**Keywords:** Music, Names of Yazhl, Names of Music, Names of Ragam, Names of Pann.

## References

[1] Shanmugam Pillai. M. *Nikandu Sorporut Kovai*. Madurai Kamarajar University, Madurai - 625 021, First Edition - 1982.
[2] Sargunam. M. *Tamil Nikandugal Aaivu*. Ilavazhan Pathipagam, Chennai – 14, August - 2002.
[3] Subramanian. S.V. *Tamil Nikandukal (Volume - 1, 2)*. Meyyappan Pathipagam, Chidambaram - 608 001, First Edition, December - 2008.
[4] Selvarasu. V.J. *Tamil Sorthotar Agarathi (Thesarasu)*. Meyyappan Publishing, 53 New Street, Chidambaram - 608 001. First Edition May - 2003.
[5] Balamurugan.V, R. Mohana. *Nikandu Aaivu*. Meyyappan Pathipagam, Chidambaram - 608 001, First Edition November - 2009.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, இதழ் - 2, வைகாசி 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நிகண்டுகளில் இசைப்பெயர்கள்

**முனைவர் கி. சுமித்ரா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்), தருமபுரி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0008-8941-9786
**DOI: 10.5281/zenodo.7981590**

**ஆய்வுச்சுருக்கம்**

*நிகண்டுகள் தமிழில் தோன்றுவதற்கு முன்னர் சொற்பொருள் உரைக்கும் நூல்கள் உரிச்சொல், உரிச்சொற்பனுவல் என்ற பொதுப்பெயர்களால் வழங்கப்பெற்று வந்தன. தமிழில் 'நிகண்டு' என்னும் சொல்லாட்சி முதன்முதலில் இறையனாரகப்பொருள் உரையில்தான் கையாளப்பெற்றுள்ளது. எனினும் 16-ஆம் நூற்றாண்டில் சூடாமணி நிகண்டில் இச்சொல் ஆட்சி எய்திய பின்னரே இது பெருவழக்கானது. நிகண்டு என்பது இலக்கணம் போன்றதொரு கருவி நூல். நிகண்டு என்னும் சொல்லுக்குக் 'கூட்டம்' அல்லது 'தொகுதி' என்று பொருள். உயர்திணை, அஃறிணை பற்றிய பல்வேறு பெயர்களையும் வினைபற்றிய பெயர்களையும் பாகுபாடு செய்து அவற்றைத் தொகுத்துக் கூறுவதோடு, அச்சொற்கள் குறிக்கும் பொருட்களையும் வரையறுத்து உணர்த்துவது நிகண்டு நூல்களின் பொதுஇயல்பு. எனவே மொழிப் பயிற்சிக்கு இன்றியமையாத கருவி நூல்களாக நிகண்டுகள் அமைந்துள்ளன. செம்மொழியாம் தமிழ்மொழியில் பல்வேறு நிகண்டுகளும் அகராதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. நிகண்டின் பன்னிரெண்டு தொகுதிகளில் காணலாகும், அனைத்துச் சொற்களுக்கும் அகராதி வடிவில் சொற்களைத் தொகுத்தல் என்பது இன்றியமையாததாகும். எனினும், பன்னிரண்டு தொகுதிகளில் ஒன்றான ஒலிப்பெயர்களில் இடம்பெறும் 'இசையின் பெயர்கள்' மட்டும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள்:** இசைப்பாட்டு, யாழின் பெயர்கள், ஏழிசையின் பெயர்கள், இராகத்தின் பெயர்கள், பண்ணின் பெயர்கள்.

## முன்னுரை

திவாகர நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, பாரதிதீபம் நிகண்டு, கயாதர நிகண்டு, சூடாமணி நிகண்டு, பொதிகை நிகண்டு ஆகிய ஆறு நிகண்டுகளில் மட்டும் ஒலிப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. ஆறு நிகண்டுகளில் இடம்பெறும் ஒலிப்பெயர்களில் ஒன்றான இசைப்பெயர்களை மட்டும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## இசைப்பாட்டு

### திவாகரம் நிகண்டு

**பாணி, வரி, பண், இசை, கானம் கொள்ளை**

**பாணே, கீதம், கந்தருவம், கேயம்… (1866)**

1. பாணி, 2. வரி, 3. பண், 4. இசை, 5. கானம், 6. கொள்ளை, 7. பாண், 8. கீதம், 9. கந்தருவம், 10. கேயம், 11. காமரம்

**உரிச்சொல் நிகண்டு**

**பாடல் கீதங் கானம் பண்**. (191)

1. கீதம், 2. கானம், 3. பண்

**பாரதி தீபம் நிகண்டு**

**வரி கொளை பன்னிசை பாண் கானம், பாணி… (499)**

1. வரி, 2. கொளை, 3. பன்னிசை, 4. பண், 5. கானம், 6. பாணி

**சூடாமணி நிகண்டு**

**வரி இராகம் பண் கேய மன்விளி கொளையி னோடு**

**பரவுகாந் தருவக் கீதம் பாணிகா… (705)**

1. வரி, 2. இராகம், 3. பண், 4. கேயம், 5. விளி, 6. கொளை, 7. கந்தருவம், 8. கீதம், 9. பாணி, 10. காமரம்

**கயாதரம் நிகண்டு**

**கூற்றியல் கீதம் பண் பாணி வரி கானங் கோடணை பாண்**

**மேற்றிகழ் காந்தருவங் கேயங் காமர மெல்லியலே. (396)**

1. கூற்றியல், 2. கீதம், 3. பண், 4. பாணி, 5. வரி, 6. கானம், 7. கோடணை, 8. பாண், 9. மேற்றிகழ், 10. கந்தருவம், 11. கேயம், 12. காமரம்

**ஏனை**

**திவாகரம் நிகண்டு: ஏனை என்பது ஓர் இசை விகற்பம் ஆகும். (1867)**

1. ஓர் இசை விகற்பம்

**மந்தவிசை**

**திவாகரம் நிகண்டு: காகுளி, மந்தவிசை. (1868)**

1. காகுளி

**உரிச்சொல் நிகண்டு: மந்தரங் காகுளி மந்தவிசைப் பெயர். (205)**

1. மந்தரம், 2. காகுளி

**சூடாமணி நிகண்டு: கருதுமந் தரத்தி னோடு காகுளி மந்த னோசை.** (713)

1. மந்தரம், 2. காகுளி

**இன்னிசை**

**திவாகரம் நிகண்டு: இராகம், இன்னிசை.(1869)**

1. இராகம்

**பாரதி தீபம் நிகண்டு: மிருளறு மன்னிசை சங்கீதம். (499)**

1. சங்கீதம்

**சூடாமணி நிகண்டு: இன்னிசைக் குழலின் நாம மேற்றவங் கியமே லாரி. (715)**

1. வங்கியம்

**சமனிசை**

**திவாகரம் நிகண்டு: மந்தம், மத்திமம், வழங்கும் சமனிசை. (1870)**

1. மந்தம், 2. மத்திமம்

**உரிச்சொல் நிகண்டு: சந்தமுறு மத்திமஞ் சான்மதுரம். (205)**

1. மத்திமம், 2. மதுரம்

**சூடாமணி நிகண்டு: மருவிய மந்தத் தோடு மத்திமஞ் சமனி சைப்பேர். (713)**

1. மந்தம், 2. மத்திமம்

**பல்லியந்தரு பாடல்**

**திவாகரம் நிகண்டு: சங்கீதம் பல்லியம் பாடல். (1871)**

1. சங்கீதம்

**யாழ்நரம்பின் ஓசை**

**திவாகரம் நிகண்டு: எழாலே, தந்திரி, நரம்பின் ஓசை. (1872)**

1. எழால், 2. தந்திரி

**வள்ளைப்பாட்டு**

**திவாகரம் நிகண்டு**

**ஊழ்முறை உலக்கை யோச்சி, வாழிய**

**தகுமனைக் கிழவர் தம்வளம் கூறி. (1873)**

1. ஊழ்முறை உலக்கை ஓச்சி மனைக்கிழவர் தம் வளம் கூறி மகளிர் பாடுவது

**நாற்பெரும் பண்**

**திவாகரம் நிகண்டு**

**யாமை யாழ்ப்பெயர், குறிஞ்சி யாவும்**

**செவ்வழி யாழ்ப்பெயர், முல்லை யாவும்… (1874)**

1. யாமை அல்லது குறிஞ்சி யாழ், 2. செவ்வழி அல்லது யாழ்,

3. முல்லையாழ், 4. பாலையாழ், 5. மருதயாழ்

**பாரதி தீபம் நிகண்டு:மொழிதரு பாலை குறிஞ்சி மருதமென் முல்லையென்ப… (500)**

1. பாலையாழ், 2. குறிஞ்சியாழ், 3. மருதயாழ், 4. முல்லையாழ்,

5. செவ்வழியாழ்

**சூடாமணி நிகண்டு: உரவிய பாலை யாழே யுலவிய குறிஞ்சி யாழே… (705)**

1. பாலையாழ், 2. குறிஞ்சியாழ், 3. மருதயாழ், 4. செவ்வழியாழ்

**பொதிகை நிகண்டு**

**மதிபாலையாழ்க் குறிஞ்சியாழ் மருதயாழ்ச் செவ்**

**வழியாழாம் பண்பாடற் கேற்றகுரல் யாழே. (316)**

1. பாலையாழ், 2. குறிஞ்சியாழ், 3. மருதயாழ், 4. செவ்வழியாழ்

**நெய்தல் யாழ்**

**திவாகரம் நிகண்டு: திறனில் யாழ்ப்பெயர் நெய்தல் யாழ்ஆம். (1875)**

1. திறனில்யாழ்

**குறிஞ்சியாழ்**

**திவாகரம் நிகண்டு**

**நைவளம், காந்தாரம், மலையம்**

**பஞ்சுரம், மருள், அயிர்ப்பு, அரற்று, செந்திறம்… (1876)**

1. நைவளம், 2. காந்தாரம், 3. மலையம், 4. பஞ்சுரம், 5. மருள், 6. அயிர்ப்பு, 7. அரற்று, 8. செந்திறம்

**பாரதி தீபம் நிகண்டு**

**நந்து படுமலை காந்தாரம் பஞ்சுர நைவளைத்தொ**

**டந்தமருள் செந்திருதி பிரற்றயி ராங்குறிஞ்சி… (501)**

1. நந்து, 2. படுமலை, 3. காந்தாரம், 4. பஞ்சுரம், 5. நைவளை, 6. மருள், 7. செந்திருதி, 8. அரற்று

**சூடாமணி நிகண்டு**

**பறைந்த நைவளங் காந்தாரம் படுமலை மருள் அயிர்ப்புச்**

**செறிந்த பஞ்சுரமெய் அரற்றுச் செந்திறங் குறிஞ்சியென்ப. (706)**

1. நைவளம், 2. காந்தாரம், 3. படுமலை, 4. மருள், 5. அயிர்ப்பு, 6. பஞ்சுரம், 7.மெய், 8. அரற்று, 9. **செந்திறம்**

**செவ்வழி யாழ்**

**திவாகரம் நிகண்டு**

**நேர்திறம், பெயர்திறம், யாமை யாழ், சாதாரி**

**என்று இவை நான்கும் செவ்வழியாழ்த் திறனே. (1877)**

1. நேர்திறம், 2. பெயர்திறம், 3. யாமையாழ், 4. சாதாரி

**பாரதி தீபம் நிகண்டு: திடனில் பெயர்த்திறஞ் சாதாரிளயாமையஞ் செவ்வழித்தே. (502)**

1.சாதாரி, 2.யாமையாழ்

**சூடாமணி நிகண்டு**

**வகுக்குநேர் திறத்தி னோடு**

**தருபெயர் திறமே யாமை சாதாரி நான்கு முல்லை. (707)**

1. நேர்திறம், 2. பெயர்திறம், 3. யாமை, 4. சாதாரி

**பாலை யாழ்**

**திவாகரம் நிகண்டு**

**அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி**
**ஆசான், ஐந்தும் பாலை யாழ்த் திறனே.... (1878)**

1. அராகம், 2. நேர்திறம், 3. உறுப்பு, 4. குறுங்கலி, 5. ஆசான், 6. படுமலைப்பாலை, 7. செவ்வழிப்பாலை, 8. செம்பாலை, 9. விளரிப்பாலை, 10. கொடிப்பாலை, 11. மேற்செம்பாலை, 12. அரும்பாலை

**பாரதி தீபம் நிகண்டு: படுமலை செவ்வழி யேயெனிற் செம்பாலை பாலையுடன்… (502)**

1. படுமலை, 2. செவ்வழி, 3. நேர்திறம், 4. செம்பாலை, 5. பாலை

**சூடாமணி நிகண்டு**

**நிறைந்திடும் அராகத் தோடு நேர்திறம் உறுப்பு மற்றைக்**
**குறுங்கலி ஆசான் ஐந்துங் குறித்தபாலைத் திறங்கள்… (706)**

1. அராகம், 2. நேர்திறம், 3. உறுப்பு, 4. குறுங்கலி, 5. ஆசான்

**மருத யாழ்**

**திவாகரம் நிகண்டு**

**நவிர், படு, குறிஞ்சி, பியந்தை யிந்நான்கும்**
**மருத யாழின் திறன் ஆகும்மே. (1879)**

1. நவிர், 2. படு, 3. குறிஞ்சி, 4. பியந்தை

**பாரதி தீபம் நிகண்டு: வடிவில் பியந்தை நவிரே குறிஞ்சி… (502)**

1. பியந்தை, 2. நவிர், 3. குறிஞ்சி

**சூடாமணி நிகண்டு**

**பெருநவிர் படு குறிஞ்சி பியந்தை யென்றிந்த நான்கும்**
**மருதயாழ்த் திறனே யாகும். (707)**

1. பெருநவிர், 2. படு, 3. குறிஞ்சி, 4. பியந்தை

**நெய்தல் யாழ்**

**திவாகரம் நிகண்டு: திறனில்யாழ், விளரி யாழ், நெய்தல்நிலம் சிவணும். (1880)**

1. திறனில்யாழ், 2. விளரி

**பாரதி தீபம் நிகண்டு: நீடு விளரித் திறங்காலம் யாழ்நெய்த னீணிலத்தாம். (503)**

1. விளரி, 2. திறங்காலம் யாழ்

**சூடாமணி நிகண்டு: விரவிய திறனில் யாழும் விளரியு நெய்த லாமே. (707)**

1. திறனில்யாழ், 2. விளரி

**பாடற்பாட்டின் பெயர்கள்**

**திவாகரம் நிகண்டு: செந்துறைப் பாட்டே பாடற்கு ஏற்பது. (1881)**

1. செந்துறைப்பாட்டு

**பாரதி தீபம் நிகண்டு: பாடலுக் கேற்பது செந்துறைப் பாட்டுமென் பாலையன்னா. (503)**

1. செந்துறைப்பாட்டு

**ஆடற்பாட்டு**

**திவாகரம் நிகண்டு: வெண்டுறைப்பாட்டே ஆடற்கு ஏற்பது. (1882)**

1. வெண்டுறைப்பாட்டு

**பாரதி தீபம் நிகண்டு: ராடலுக் கேற்பது வெண்டுறையாகு மலருலக்கை. (503)**

1. வெண்டுறைப்பாட்டு

**அகமார்க்கம்**

**திவாகரம் நிகண்டு: அருமையிற் பாடல் அகமார்க்கம் ஆகும். (1883)**

1. அருமையிற்பாடுவது

**ஏழிசையின் பெயர்கள்**

**திவாகரம் நிகண்டு**

**குரலே, துத்தம், கைக்கிளை, உழையே,**
**இளியே, விளரி, தாரம் என்ப. (1884)**

1. குரல், 2. துத்தம், 3. கைக்கிளை, 4. உழை, 5. இளி, 6. விளரி, 7. தாரம்

**சூடாமணி நிகண்டு**

**களையறு குரலே துத்தங் கைக்கிளை உழை யினோடே**
**இளியொடு விளரி தாரம் என்ப ஏழிசையின் நாமம். (708)**

1. குரல், 2. துத்தம், 3. கைக்கிளை, 4. உழை, 5. இளி, 6. விளரி, 7. தாரம்

**பொதிகை நிகண்டு**

**குரல் துத்தங் கைக்கிளையே யுழை யிளியே விளரி**
**குணிதார மேழிசையா மிடறுநாக் கண்ணஞ். (317)**

1. குரல், 2. துத்தம், 3. கைக்கிளை, 4. உழை, 5. இளி, 6. விளிரி, 7. தாரம்

**ஏழிசையின் ஓசைகள்**

**திவாகரம் நிகண்டு**

**சங்கு, குயில், மயில், யானை புரவி,**
**அன்னம், காடை, அவற்று, ஓசை. (1885)**

1. சங்கு, 2. குயில், 3. மயில், 4. யானை, 5. புரவி, 6. அன்னம், 7. காடை

**சூடாமணி நிகண்டு**

**வண்டொடு கிள்ளை வாசி மதயானை தவளை தேனு**
**ஒண்டிற லாடுஎன் றேழும் ஒதும் ஏழிசையில் ஓசை. (712)**

1. வண்டு, 2. கிள்ளை, 3. வாசி, 4. யானை, 5. தவளை, 6. தேன், 7. ஆடு

**ஏழிசையின் எழுத்து**

**திவாகரம் நிகண்டு**

**சவ்வும், ரிவ்வும், கவ்வும், மவ்வும்**

**பவ்வும், தவ்வும், நிவ்வும், என்று…(1886)**

1. ச, 2. ரி, 3. க, 4. ம, 5. ப, 6. த, 7. நி

**இராகத்தின் பெயர்கள்**

**திவாகரம் நிகண்டு**

**தக்க ராகம், துக்க ராகம்,**

**பழந்தக்க ராகம், நட்ட ராகம்.... (1887)**

1. தக்கராகம், 2. துக்கராகம், 3. பழந்தக்கராகம், 4. நட்டராகம், 5. கின்னராகம், 6. சங்கின்னராகம், 7. நிருபதுங்க ராகம்

**பஞ்சமம்**

**திவாகரம் நிகண்டு: காந்தார பஞ்சமம், உருத்திர பஞ்சமம். (1891)**

1. காந்தார பஞ்சமம், 2.உருத்திர பஞ்சமம்

**தக்கேசி பெயர்**

**திவாகரம் நிகண்டு: பஞ்சமம், காம்போதி, பாண்டி தக்கேசி. (1892)**

1. பஞ்சமம், 2. காம்போதி, 3. பாண்டி

**இந்தளத்தின்பெயர்**

**திவாகரம் நிகண்டு: இந்தளம், மருளிந் தளமே ஆகும். (1893)**

1. மருளிந்தளம்

**பண்ணின்பெயர்கள்**

**திவாகரம் நிகண்டு**

**இராமக்கிரி, தேசாக்கிரி கொண்டைக்கிரி, மகுடராமக்கிரி,**

**அந்தாளிபாடை, நட்ட பாடை..... (1894)**

1. இராமக்கிரி, 2. தேசாக்கிரி, 3. கொண்டைக்கிரி, 4. மகுடராமக்கிரி, 5. அந்தாளிபாடை, 6. நட்டபாடை, 7. அருமவதி, 8. செந்துருதி, 9. சீகாமரம், 10. சிகண்டி, 11. காந்தாராம், 12. புறநீர்மை, 13. குறண்டி, 14. கௌசிகம், 15. நாட்டை, 16. சாதாரி, 17. சாயரி, 18. குச்சரி, 19. நளுத்தை, 20. பழம்பஞ்சுரம், 21. பஞ்சுரம், 22. கவ்வாணம், 23. கொல்லிகவ்வாணம், 24. காஞ்சி, 25. கவுடிகம், 26. பிலகரி, 27. பயிரவி, 28. காம்போதி

**ஒலித்தலின் பெயர்கள்**

**திவாகரம் நிகண்டு**

**கலித்தல், சும்மை, கம்பலை, அழுங்கல்,**

**சிலைத்தல், துவைத்தல், சிலம்பல், இரங்கல்… (1895)**

1. கலித்தல், 2. சும்மை, 3. கம்பலை, 4. அழுங்கல், 5. சிலைத்தல், 6. துவைத்தல், 7. சிலம்பல், 8. இரங்கல், 9. இமிழ்த்தல், 10. விம்மல், 11. இரட்டல், 12. ஏங்கல், 13. கனைத்தல், 14. தழங்கல், 15. கறங்கல், 16. அரற்றல், 17. இசைத்தல்

**சூடாமணி நிகண்டு**

**சிரற்றலே தொனித்த லோடு தெழித்தலே குமிறல் விம்மல்**
**உரற்றலே யரற்றல் வேறும் உரைத்தல் யுளைத்தல் ஏங்கல்... (719)**

1. சிற்றல், 2. தொனித்தல், 3. தெழித்தல், 4. குமிறல், 5. விம்மல், 6. உரற்றல், 7. அரற்றல், 8. உரைத்தல், 9. உளைத்தல், 10. ஏங்கல், 11. இரைத்தல், 12. இரட்டல் 13. இடித்தல் 14. இமிழ்த்தல், 15. குரைத்தல், 16. முழக்கல், 17. குளிறல், 18. இசைத்தல்

**கயாதரம் நிகண்டு**

**சலித்தல் நரல்தல் துவைத்தல் கரைதல் தழங்கல் பம்பல்**
**கலித்தல் முரலோசை யாகுலங் கோலாகலந் திமிலம்... (398)**

1. சலித்தல், 2. நரல்தல், 3. துவைத்தல், 4. கரைதல், 5. தழங்கல், 6. பம்பல், 7. கலித்தல், 8. கோலாகலம், 9. கலந்தல், 10. திமிலம், 11. வலித்தல், 12. தெழித்தல், 13. மருளல், 14. ஒலித்தல், 15. இரங்கல், 16. கறங்கல், 17. முழங்கல்

**ஒலியின்பெயர்கள்**

**திவாகரம் நிகண்டு**

**ஓசை, நாதம், கம்பலை, ஒலே,**
**ஆகுலம், புலம்பல், கோடணை, அரவம்... (1896)**

1. ஓசை, 2. நாதம், 3. கம்பலை, 4. ஒல், 5. ஆகுலம், 6. புலம்பல், 7. கோடணை, 8. அரவம், 9. ஓதை, 10. கர்ச்சனை

**சூடாமணி நிகண்டு**

**அரவமே களனே யோதை யாகுலம் ஆரவாரம்**
**கருதிகோடணை புலம்பு தொனியியந் துழனி யோசை... (717)**

1. அரவம், 2. களன், 3. ஓதை, 4. ஆகுலம், 5. ஆராவாரம், 6. கருதி, 7. கோடணை, 8. புலம்பு, 9. தொனி, 10. இயம், 11. துழனி, 12. ஓசை, 13. உரை, 14. இசை, 15. இடி, 16. நாதம், 17. கோடணை, 18. பாடு, 19. இரை, 20. கம்பை, 21. வகுணி

**பொதிகை நிகண்டு**

**தெளித்தல் விம்மல் கமிற லிரட்டுத லரற்ற லோர்தல்**
**சிலம்ப லியம்புதல் சிதைத்த லிசைத்தலே முழங்கல்... (320)**

1. தெளித்தல், 2. விம்மல், 3. கமிறல், 4. இரட்டுதல், 5. அரற்றல், 6. ஓர்தல், 7. சிலம்பல், 8. இயம்புதல், 9. சிதைத்தல், 10. இசைத்தல், 11. முழங்கல், 12. இளித்தல், 13. உரற்றுதல், 14. உரைத்தல், 15. இரைத்தல், 16. இடித்தல், 16. ஏங்கல், 17. இடித்தல், 18. குளிறதல், 19. வைத்தல்,

20. அலம்பல், 21. கறங்கல், 22. அழுங்குதல், 23. உழைத்தல், 24. கதித்தல், 25. ஒனித்தல், 26. கனைத்தல், 27. உலம்பல், 28. புலம்பல், 29. சிரற்றல், 30. பிளிற்றல், 31. முக்கல், 32. நெளிர்தல், 33. பிரற்றல், 34. பயிறன், 35. முரலுதல்

**கயாதரம் நிகண்டு**

**ஓதுஞ் சிலம்ப லிசைநாதங் கம்பலை யோடிரங்கல்**
**போதும் படுதலி ரட்டல் துழனி புலம்பல் சும்மை… (399)**

1. சிலம்பல், 2. இசைத்தல், 3. கம்பலை, 4. இரங்கல், 5. படுதல், 6. இரட்டல், 7. துழனி, 8. புலம்பல், 9. சும்மை

**உள்ளோசை**

**திவாகரம் நிகண்டு**

**முரல்வும், நரல்வும்,தெளிரும், வெளிவரும்**
**உழையும், நுணுக்கமும், உள்ளோசை ஆகும். (1897)**

1. முரல்வு, 2. நரல்வு, 3.தெளிர், 4. உழை, 5. நுணுக்கம்

**எழுத்தலாவோசை**

**திவாகரம் நிகண்டு**

**பிளிறலும், குளிறலும், பிரற்றலும், சிரற்றலும்**
**மருளலும், பயிறலும், குரைத்தலும், கனைந்ததும்… (1898)**

1. பிளிறல், 2. குளிறல், 3. பிரற்றல், 4. சிரற்றல், 5. மருளல், 6. பயிறல், 7. குரைத்தல், 8. கனைத்தல், 9. முளைத்தல், 10. அகவல்

**பாரதி தீபம் நிகண்டு**

**பிளிறல் குரைத்த விரைத்தல் சிரத்தல் பிரத்தலுடன்**
**குளிறு பயில்த லுழைத்த தெழுத்துடன் கூரவிசைசெய். (504)**

1. பிளிறல், 2. குரைத்தல், 3. விரைத்தல், 4. சிரத்தல், 5. பிரத்தல், 6. குளிறல், 7. பயில்தல், 8. உழைத்தல்

**கயாதரம் நிகண்டு: சொல்லும் பிளிறல் குளிறல் பிரற்றல் சிரற்றல் மருள்… (397)**

1. பிளிறல், 2. குளிறல், 3. பிரற்றல், 4. சிரற்றல், 5. பயிறல், 6. குரைத்தல்

**ஆரவாரம்**

**திவாகரம் நிகண்டு**

**அதிர்ச்சி, அழுங்கல், ஞெள்ளல், உரற்றல்**
**குரைத்தல், தழங்கல், பிளிறல், துவைத்தல்… (1899)**

1. அதிர்ச்சி, 2. அழுங்கல், 3. ஞெள்ளல், 4. உரற்றல், 5. குரைத்தல், 6. தழங்கல், 7. பிளிறல், 8. துவைத்தல், 9. கலித்தல், 10. கரைத்தல், 11. ஒதை, 12. பராரை, 13. தெழித்தல், 14. புலம்பல், 15. பூசல், 16. தமரம், 17. கனைத்தல், 18. சிள்ளெனல், 19. ஒலி, 20. கோலாகலம், 21. திமிலம்

**பாரதி தீபம் நிகண்டு**

**இரைத்தல், திரைச்சி, தழங்கல், கறங்க... லஞெள்ள,**

**லுரைத்தறு வைத்தல் கலித்தல் கரைத்தலு மும்பபொலி… (505)**

1. இரைத்தல், 2. திரைச்சி, 3. தழங்கல், 4. கறங்கல், 5. ஞெள்ளல், 6. உரைத்தல், 7. வைத்தல், 8. கலித்தல், 9. கரைத்தல்

**அனுகரணவோசை**

**திவாகரம்நிகண்டு**

**இம்மெனல், கல்லெனல், இழுமெனல், வல்லெனல்,**

**பொம்மெனல், ஒல்லெனல், பொள்ளெனல், ஞெள்ளெனல். (1900)**

1. இம்மெனல், 2. கல்லெனல், 3. இழுமெனல், 4. வல்லெனல், 5. பொம்மெனல், 6. ஒல்லெனல், 7. பொள்ளெனல், 8. ஞெள்ளெனல்

**உரிச்சொல் நிகண்டு**

**அம்மெனல், லொல்லெனல், லார்ந்திட் டிழுமெனல்**

**கொம்மெனல் கல்லெனல் கோலென… (202)**

1. அம்மெனல், 2. ஒல்லெனல், 3. இழுமெனல், 4. கொம்மெனல், 5. கல்லெனல், 6. கோலெனல், 7. இம்மெனல், 8. வல்லெனல், 9. பொள்ளெனல்

**பாரதி தீபம் நிகண்டு**

**யெளுமெனழுமெனல் கல்லென லோவென லிம்மெனலோ**

**டளவி லஞெரொ பொள்ளெனிலா மனுகர ணத்ததுவே… (504)**

1. அம்மெனல், 2. ஒல்லெனல், 3. இழுமெனல், 4. கொம்மெனல், 5. பொருள்ளெனல்

**சூடாமணி நிகண்டு**

**இம்மெனல் கல்லென் றிட்டல் இழுமெனல் வல்லென் றிட்டல்**

**பொம்மெனல் ஒல்லென் றிட்டல் பொள்ளெனல் நெரோலன் றிட்டல்… (712)**

1. இம்மெனல், 2. கல்லெனல், 3. இழுமெனல், 4. வல்லெனல், 5. பொம்மெனல், 6. ஒல்லெனல் 7. பொள்ளெனல், 8. நெரேலெனல், 9. கொம்மெனல், 10. விடோலெனல், 11. முகேரெனல், 12. அம்மெனல், 13. சரேலெனல்

**பொதிகை நிகண்டு**

**ஒல்லெனன் ஞெரேலெனல் வல்லெனன் மொகேரென்னல்**

**ஒய்யெனல் வெடேலெனல் பொள்ளெனல் சரேரென்னல்… (321)**

1. ஒல்லெனல், 2. ஞெரேலெனல், 3. வல்லெனல், 4. மொகேரெனல், 5. ஒய்யெனல், 6. வெடேலேனல், 7. பொள்ளெனல், 8. சரலெனல், 9. கல்லெனல், 10. விரீரெனல், 11. கம்மெனல், 12. பொம்மெனல், 13. கொல்லெனல், 14. கொம்மெனல்

**கயாதரம் நிகண்டு**

**இழுமெனல் கல்லெனல் பொல்லெனல் பொள்ளென லின்னுஞெள்ளல்**
**விழுமியவிண்ணெனல் பம்மெனல் பூரெனல் வேறுஞெரேல்... (400)**

1. இழுமெனல், 2. கல்லெனல், 3. பொல்லெனல், 4.பொள்ளெனல், 5. விண்ணெனல், 6. பம்மெனல், 7. பூரெனல்

**கூத்து**

**உரிச்சொல் நிகண்டு: மாட னிருத்த நடநட்டங் கூத்திசைப். (191)**

1. ஆடல், 2. நிருத்தம், 3. நடம், 4. நட்டம்

**அகராதி வடிவில் நிகண்டுகளின் இசைப்பெயர்கள்**

திவாகர நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, பாரதிதீபம் நிகண்டு, கயாதர நிகண்டு, சூடாமணி நிகண்டு, பொதிகை நிகண்டு ஆகிய ஆறு நிகண்டுகளில் மட்டும் ஒலிப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. ஆறு நிகண்டுகளில் இடம்பெறும் ஒலிப்பெயர்களில் ஒன்றான இசைப்பெயர்களை அகராதி வடிவில் அகரவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கீழே இடம்பெறும் அட்டவணையில் முதலில் இசையின் பெயர்களும் அடுத்து அப்பெயருக்குரிய பொருள்களும், அடுத்து அவ்இசைப்பெயர்கள் எந்தெந்த நிகண்டுகளில் இடம்பெற்றுள்ளன என்பதும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து இசைப்பெயர்களில் மீண்டும் மீண்டும் வரக்கூடிய சொற்களை விட்டுவிட்டு ஒரு பதிவினை மட்டும் கணக்கில் கொண்டு 34 இசையின் பெயர்கள், பொருள், இடம்பெறக்கூடிய நிகண்டுகள் என்ற வகையில் இவ்வட்டவணையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

| வ. எண் | இசைப் பெயர்கள் | பொருள் | நிகண்டின் பெயர்கள் |
|---|---|---|---|
| **1.** | இசைப்பாட்டு | கூற்றியல், பாணி, வரி, பண், இசை, கானம், கொளை, கொள்ளை, பாண், கோடணை, கீதம், கந்தருவம், கேயம், காமரம், பன்னிசை, மேற்றிகழ், இராகம் | திவாகர நிகண்டு 1866<br>பாரதி தீபம் நிகண்டு 499<br>சூடாமணி நிகண்டு 705<br>கயாதரம் நிகண்டு 396<br>உரிச்சொல் நிகண்டு 191 |
| **2.** | ஏனை | ஓர் இசை | திவாகர நிகண்டு 1867 |
| **3.** | மந்தவிசை | காகுளி, மந்தரம் | திவாகர நிகண்டு 1868<br>உரிச்சொல் நிகண்டு 205<br>சூடாமணி நிகண்டு 713 |
| **4.** | இன்னிசை | இராகம், சங்கீதம் | திவாகர நிகண்டு 1869<br>பாரதி தீபம் நிகண்டு 499<br>சூடாமணி நிகண்டு 715 |
| **5.** | சமனிசை | மந்தம், மத்திமம், மதுரம் | திவாகர நிகண்டு 1870 |

| | | | |
|---|---|---|---|
| | | | உரிச்சொல் நிகண்டு 205<br>சூடாமணி நிகண்டு 713 |
| **6.** | பல்லியந்தரு பாடல் | சங்கீதம் | திவாகர நிகண்டு 1871 |
| **7.** | யாழ்நரம்பின் ஓசை | எழால், தந்திரி | திவாகர நிகண்டு 1872 |
| **8.** | வள்ளைப்பாட்டு | ஊழ்முறை உலக்கை ஓச்சி மனைக்கிழவர் தம் வளம் கூறி மகளிர் பாடுவது | திவாகர நிகண்டு 1873 |
| **9.** | நாற்பெரும் பண் | யாமை அல்லது குறிஞ்சி யாழ், செவ்வழி அல்லது யாழ், முல்லையாழ், பாலையாழ், மருதயாழ் | திவாகர நிகண்டு 1874<br>பாரதி தீபம் நிகண்டு 500<br>சூடாமணி நிகண்டு 705<br>பொதிகை நிகண்டு 316 |
| **10.** | நெய்தல் யாழ் | திறனில் யாழ், திறங்காலம் யாழ், விளரி | திவாகர நிகண்டு 1875 |
| **11.** | குறுஞ்சியாழ் | நைவளை, நைவளம், காந்தாரம், மலையம், பஞ்சுரம், மருள், அயிர்ப்பு, செந்திருதி, அரற்று, செந்திறம், நந்து, படுமலை | திவாகர நிகண்டு 1876<br>பாரதிதீபம் நிகண்டு 501<br>சூடாமணி நிகண்டு 706 |
| **12.** | செவ்வழி யாழ் | நேர்திறம், பெயர்திறம், யாமையாழ், சாதாரி | திவாகர நிகண்டு 1877<br>பாரதி தீபம் 502<br>சூடாமணி நிகண்டு 707 |
| **13.** | பாலை யாழ் | அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, ஆசான், படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, செம்பாலை, விளரிப்பாலை, கொடிப்பாலை, மேற்செம்பாலை, அரும்பாலை | திவாகர நிகண்டு 1878<br>பாரதி தீபம் 502<br>சூடாமணி நிகண்டு 706 |
| **14.** | மருத யாழ் | நவிர், பெருநவிர், படு, குறிஞ்சி, பியந்தை | திவாகர நிகண்டு 1879<br>பாரதி தீபம் 502<br>சூடாமணி நிகண்டு 707 |
| **15.** | நெய்தல் யாழ் | திறனில் யாழ், விளரி | திவாகர நிகண்டு 1880<br>பாரதி தீபம் 503<br>சூடாமணி நிகண்டு 707 |

| | | | |
|---|---|---|---|
| **16.** | பாடற்பாட்டின் பெயர்கள் | செந்துறைப்பாட்டு | திவாகர நிகண்டு 1881<br>பாரதி தீபம் 503 |
| **17.** | ஆடற்பாட்டு | வெண்டுறைப்பாட்டு | திவாகர நிகண்டு 1882<br>பாரதிதீபம் நிகண்டு 503 |
| **18.** | அகமார்க்கம் | அருமையிற்பாடுவது | திவாகர நிகண்டு 1883 |
| **19.** | ஏழிசையின் பெயர்கள் | குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் | திவாகர நிகண்டு 1884<br>சூடாமணி நிகண்டு 708<br>பொதிகை நிகண்டு 317 |
| **20.** | ஏழிசையின் ஓசைகள் | சங்கு, குயில், மயில், யானை, புரவி, அன்னம், காடை, வண்டு, கிள்ளை, வாசி, யானை, தவளை, தேன், ஆடு | திவாகர நிகண்டு 1885<br>சூடாமணி நிகண்டு 712 |
| **21.** | ஏழிசையின் எழுத்து | ச, ரி, க, ம, ப, த, நி | திவாகர நிகண்டு 1886 |
| **22.** | இராகத்தின் பெயர்கள் | தக்கராகம், துக்கராகம், பழந்தக்கராகம், நட்டராகம்,கின்னராகம், சங்கின்னராகம், நிருபதுங்கராகம் | திவாகர நிகண்டு 1887 |
| **23.** | பஞ்சமம் | காந்தார பஞ்சமம், உருத்திர பஞ்சமம் | திவாகர நிகண்டு 1891 |
| **24.** | தக்கேசி பெயர் | பஞ்சமம், காம்போதி, பாண்டி | திவாகர நிகண்டு 1892 |
| **25.** | இந்தளத்தின் பெயர் | மருளிந்தளம் | திவாகர நிகண்டு 1893 |
| **26.** | பண்ணின் பெயர்கள் | இராமக்கிரி, தேசாக்கிரி, கொண்டைக்கிரி, மகுடராமக்கிரி, அந்தாளிபாடை, நட்டபாடை, அருமவதி, செந்துருதி, சீகாமரம், சிகண்டி, காந்தாராம், புறநீர்மை, குறண்டி, கௌசிகம், நாட்டை, சாதாரி, சாயரி, குச்சரி, நளுத்தை, பழம்பஞ்சுரம், பஞ்சுரம், கவ்வாணம், கொல்லிகவ்வாணம், காஞ்சி, கவுடிகம், பிலகரி, பயிரவி, காம்போதி | திவாகர நிகண்டு 1894 |
| **27.** | ஒலித்தலின் பெயர்கள் | கலித்தல், சும்மை, கம்பலை,அழுங்கல், சிலைத்தல், துவைத்தல், சிலம்பல், இரங்கல், இமிழ்த்தல், விம்மல்,இரட்டல், ஏங்கல், கனைத்தல், தழங்கல், கறங்கல், அரற்றல், இசைத்தல், | திவாகர நிகண்டு 1895<br>சூடாமணி நிகண்டு 719<br>கயாதர நிகண்டு 398 |

| | | | |
|---|---|---|---|
| | | சிற்றல், தொனித்தல், தெழித்தல், குமிறல், உரற்றல், உரைத்தல், உளைத்தல், ஏங்கல், இரைத்தல், இடித்தல், குரைத்தல், முழக்கல், குளிறல், சலித்தல், நரல்தல், கரைதல், தழங்கல், பம்பல், கலித்தல், கோலாகலம், கலந்தல், திமிலம், வலித்தல், மருளல், ஒலித்தல், முழங்கல் | |
| **28.** | ஒலியின் பெயர்கள் | ஓசை, நாதம், கம்பலை, ஒல், ஆகுலம், புலம்பல், அரவம், ஓதை, கர்ச்சனை, அரவம், களன், ஆகுலம், ஆரவாரம், கருதி, கோடணை, புலம்பு, தொனி, இயம், துழனி, உரை, இசை, இடி, நாதம், பாடு, இரை, கம்பை, வகுணி, தெளித்தல், விம்மல், கமிறல், இரட்டுதல், அரற்றல், ஓர்தல், சிலம்பல், இயம்புதல், சிதைத்தல், இசைத்தல், முழங்கல், இளித்தல், உரற்றுதல், உரைத்தல், இரைத்தல், இடித்தல், ஏங்கல், இடித்தல், குளிற்தல், வைத்தல், அலம்பல், கறங்கல், அழுங்குதல், உழைத்தல், கதித்தல், ஒனித்தல், கனைத்தல், உலம்பல், புலம்பல், சிரற்றல், பிளிற்றல், முக்கல், நெளிர்தல், பிரற்றல், பயிறல், முரலுதல், சிலம்பல், கம்பலை, இரங்கல், இரட்டல், படுதல், சும்மை | திவாகர நிகண்டு 1896<br>சூடாமணி நிகண்டு 717<br>பொதிகை நிகண்டு 320<br>கயாதரம் நிகண்டு 399 |
| **29.** | உள்ளோசை | முரல்வு, நரல்வு, தெளிர், உழை, நுணுக்கம் | திவாகர நிகண்டு 1897 |
| **30.** | எழுத்தலா-வோசை | பிளிறல், குரைத்தல், இரைத்தல், சிரத்தல், பிரத்தல், பயில்தல், உழைத்தல், மருளல், குரைத்தல், கனைத்தல், முளைத்தல், அகவல், விரைத்தல், சிரத்தல், குளறல், குளிறல், பிரற்றல், சிரற்றல், பயிறல் | திவாகர நிகண்டு 1898<br>பாரதி தீபம் நிகண்டு 504<br>கயாதர நிகண்டு 397 |
| **31.** | ஆரவாரம் | அதிர்ச்சி, அழுங்கல், ஞெள்ளல், உரற்றல், குரைத்தல், தழங்கல், பிளிறல், துவைத்தல், கலித்தல், கரைத்தல், ஓதை, பராரை, தெழித்தல், புலம்பல், பூசல், தமரம், கனைத்தல், | திவாகர நிகண்டு 1899<br>பாரதி தீபம் நிகண்டு 505 |

| | | | |
|---|---|---|---|
| | | சிள்ளெனல், ஒலி, கோலாகலம், திமிலம், இரைத்தல், திரைச்சி, தழங்கல், கறங்கல், ஞெள்ளல், உரைத்தல், வைத்தல் | |
| **32.** | அனுகரண-வோசை | இம்மெனல், கல்லெனல், இழுமெனல், வல்லெனல், பொம்மெனல், ஒல்லெனல், பொள்ளெனல், ஞெள்ளெனல், அம்மெனல், கொம்மெனல், கோலெனல், பொருளெனல், நெரேலெனல், விடோலெனல், முகேரெனல், சரேலெனல், ஞெரேலெனல், மொகேரெனல், ஒய்யெனல், வெடேலேனல், விரீரெனல், கம்மெனல், கொல்லெனல், பொல்லெனல், விண்ணெனல், பம்மெனல், பூரெனல் | திவாகர நிகண்டு 1900<br>உரிச்சொல் நிகண்டு 202<br>பாரதி தீபம் நிகண்டு 504<br>சூடாமணி நிகண்டு 712<br>பொதிகை நிகண்டு 321<br>கயாதரம் நிகண்டு 400 |
| **33.** | கூத்து | ஆடல், நிருத்தம், நடம், நட்டம் | உரிச்சொல் நிகண்டு 191 |

**முடிவுரை**

சொல்லின் பொருளைத் தெளிவுபடுத்தத் தோன்றியவை நிகண்டுகள். இக்கட்டுரையில் 33 இசைத் தொடர்பான சொற்கள் குறித்துத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. நிகண்டுகளை முழுவதும் ஆய்வு செய்வதன் மூலம் எண்ணற்ற தமிழ்ச் சொற்களைப் பெறுவதற்கான வாய்ப்பு உண்டாகின்றது. இறுதியில் அகராதி வடிவில் இசையின் பெயர்களை பொருளுடன் அகரவரிசைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்றுள்ள இயந்திர யுகத்தாலும், புதுமை ஆக்கத்தாலும், இலக்கிய இலக்கண நூல்களில் கையாளப்பட்ட சொற்கள் அனைத்தும் நம் சமூக வழக்கினின்று மறைந்து கொண்டு வருகின்றன. எனவே அச்சொற்களை அறிந்து கொள்ளும் விதமாக ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாய்வுகள் மூலம் அரிய சொற்களைத் தேடிக் கண்டறிந்து அவற்றையெல்லாம் தொகுப்பதாலும் தொகுத்த சொற்களுக்கு பொருள் விளக்கம் காண்பதன் மூலமும் பல்வேறு ஒலிப்பெயர்களைத் தொகுத்து உருவாக்க முடியும். அதற்கு முன்னோடி முயற்சியாகத்தான் இவ் ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] சண்முகம்பிள்ளை. மு. *நிகண்டுச் சொற்பொருட் கோவை.* மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை - 625 021, முதற்பதிப்பு - 1982.

[2] சற்குணம். மா. *தமிழ் நிகண்டுகள் ஆய்வு.* இளவழகன் பதிப்பகம், சென்னை - 14. ஆகஸ்டு - 2002.

[3] சுப்பிரமணியன். ச.வே., (ப.ஆ). *தமிழ் நிகண்டுகள் (தொகுதி - 1, 2)*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608 001, முதற்பதிப்பு: டிசம்பர் - 2008.

[4] செல்வராசு. வீ.ஜே. *தமிழ்ச் சொற்றொடர் அகராதி (தெசாரசு)*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608 001, முதற்பதிப்பு: மே - 2003.

[5] பாலமுருகன். வெ, இரா. மோகனா. *நிகண்டு ஆய்வு*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608 001, முதற்பதிப்பு: நவம் - 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.